1974 சனவரி 23]

Tamil Nadu Livestock Assistants' Association.

* 42. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Livestock Assistants' Association has staged any demonstration before the Directorate of Animal Husbandry, Teynampet, Madras, about the 9th October, 1972; and

(*b*) if so, the reasons therefor?

தமிழ்நாடு கால்நடை வளர்ப்புத் துறை உதவியாளர்கள் சங்கம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு கால்நடை வளர்ப்புத் துறை உதவியாளர்கள் சங்கம் 1972 அக்டோபர் 9-ம் நாள் வாக்கில், சென்னை தேனும்பேட்டையிலுள்ள கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் எதும் நடத்தியதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) இரண்டாவது சம்பளக் கமிஷன் செய்த பரிந்துரையின்படி கிடைத்த சம்பளம் போதாது என்ற காரணம் கூறப்பட்டது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது நிவர்த்திக்கப்பட்டதா? அரசு இதற்கான முடிவு என்ன எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, சங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் இரண்டாம் நிலை உதவியாளர்களுக்கு ரூபாய் 15 அலவன்ஸ் உயர்வு அளிக்கப்பட்டது. முதல் நிலை உதவியாளர்களுக்கு ரூ. 300–15–420–20–500 என்ற விகிதத்தில் சம்பளம் திருத்தியமைக்கப்பட்டது.